# திராவிடத்தால் வாழ்கிறோம்

1209

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

116

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

## தமிழ்நாடு வரலாற்றில் இப்படியும் ஒரு மாநாடு!

கொளுத்தும் வெய்யிலில் குடிக்க நீர் இல்லாமல், உணவு கொடுக்காமல், களேபர மாநாடுகளைக் கூட்டி, ஆன்லைன் வழியாக அவதூறுகள், பொய் மூட்டைகளை வீசி ஆட்சியைப் பிடித்திருக்கும் கட்சிகள் உருவாகியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், வரலாற்றில் இப்படியும் சில அரசியல் தலைவர்கள் இருந்திருக்கிறார்களா எனத் திரும்பிப் பார்க்கவைக்கும் ஒரு மாநாடு 1957-ஆம் ஆண்டில் நடந்திருக்கிறது. 5.8.1957 அன்று, காஞ்சிபுரம் மாவட்டம் தண்டலத்தில் பேரறிஞர் அண்ணாவால் நடத்தப்பட்ட ‘பொதுநல மாநாடு’தான் அது. அதற்கு முன்போ, பின்போ அப்படியொரு மாநாட்டை தமிழ்நாடு இன்னும் காணவில்லை. 1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில்தான் தி.மு.கழகம் முதன்முதலாகப் போட்டியிட்டு, 15 உறுப்பினர்களைப் பெற்றிருந்தது. அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற அண்ணா, தொகுதி முன்னேற்றம் குறித்து வழிவகை காண அன்றைய முதலமைச்சர் காமராசரை அழைத்து, இம்மாநாட்டை நடத்தினார்.

அரசியல் களத்தில் எதிரும் புதிருமான கட்சிகளின் தலைவர்கள், ஒரே மேடையில் பேசுகிறார்கள் என காஞ்சிபுரம் முழுவதும் பேசுபொருளாகவும் பரபரப்பாகவும் இருந்தது. மாலை 5 மணிக்குத்தான் மாநாடு என்றாலும், நண்பகலில் இருந்தே தண்டலம் செல்லும் பாதையில், மக்கள் சாரை சாரையாகச் செல்லத் தொடங்கிவிட்டனர். அன்றைக்கு காஞ்சிபுரம் நகர மேற்கு எல்லையாக இருந்த ‘வெள்ளை கேட்’ பகுதியில் இருந்து காமராசரை வரவேற்று, தண்டலத்திற்கு அழைத்துச் சென்றார் அண்ணா. முதலமைச்சரின் வருகைக்காக, மண் பாதையைச் செப்பனிட்டு வைத்திருந்தார்கள். செல்லும் வழியெங்கும் காமராசருக்கும் அண்ணாவுக்கும் வரவேற்புகள் வழங்கப்பட்டன. தலைவர்களின் கார்கள் தண்டலத்திற்குள் நுழைந்ததும், வெடிச்சத்தம் விண்ணைப் பிளந்தது. வீட்டுக்கு வீடு தோரணங்கள், தெருவெல்லாம் வரவேற்பு வளைவுகள் என ஒட்டுமொத்த தண்டலமும் விழாக்கோலம் பூண்டிருந்தது.

முதலில் வரவேற்புரையாற்றிய அண்ணா, “நம்முடைய முதலமைச்சர் காமராசர் கிராமத்து முன்னேற்றத்தில் நல்ல அக்கறை காட்டுகின்றவர் என்பதால்தான், நானும் அவரும் வேறு வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றாலும், இந்தப் பிரச்சினைகள் கட்சிக்கு அப்பாற்பட்டன என்ற ஒரு பெருந்தன்மையிலே, அவர்கள் இன்றைய தினம் வர இசைந்தார்கள்” என்றார். அடுத்து, தண்டலம் கிராமத்தினர் சார்பில் காமராசருக்கும் அண்ணாவுக்கும் வரவேற்பு வழங்கப்பட்டது. ‘பரந்தூர் பிர்க்கா விவசாயிகள் சங்கம்’ உள்பட பல்வேறு அமைப்புகள் மாலை சூட்டி வரவேற்றனர். திடீரென மழை பெய்யத் தொடங்க, மக்கள் கூட்டம் கலையாமல் அப்படியே இருந்தது. “மக்களை மழையில் காக்கவைக்க வேண்டாம். இன்னொரு சமயம் வருகின்றேன், உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி” என்றார் காமராசர். ஆனால், அவர் சொல்லி முடிப்பதற்குள் மழை நின்றுவிட, ‘நிகழ்ச்சி தொடரட்டும்’ என மக்கள் ஆரவாரம் செய்தனர்.

அதன்பிறகு பேசிய காமராசர், “சாதி வித்தியாசங்களைச் சமுதாயத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். மக்கள் நலனுக்குப் பாடுபடுவதில் அரசியல் கட்சி வேறுபாடுகள் இருப்பதற்கில்லை. அண்ணாத்துரை அவர்களோ, நானோ குறுக்கே மறுக்கே பேசிக்கொண்டிருக்கலாம். அசெம்பிளியில் பேசலாம் - வெளியிலே பேசலாம் - மேடைகளில் பேசலாம். ஆனால், இதுபோன்ற காரியங்களில் ஒருவருக்கொருவர் வேறுபாடோ - மாற்று எண்ணங்களோ இருக்க முடியாது” என்றார். அன்றைய காஞ்சி மன்றத் துணைத்தலைவர் அ.க.தங்கவேலர் நன்றி கூற, கூட்டம் முடிவுற்றது. மீண்டும் மழைத்துளிகளும் விழத்தொடங்கின. வந்திருந்த அனைவருக்கும் விருந்து கொடுத்து அனுப்பி வைத்தனர் தண்டலம் கிராம மக்கள்.

**...கூட்டம் திரளும்**

## 100 நாட்களைக் கடந்தால்..?

சட்டம் ஒழுங்கும் நிர்வாகச் சீர்கேடுகளும் தலைவிரித்தாடும் நிலையில், முகநூலில் தமிழ் மறவன் என்பவரின் பதிவு இது...

“வெற்றி பெற்ற நாளில் இருந்த ஆர்வம், 12 நாட்களிலேயே காணாமல் போயிருக்கிறது. ‘ஆட்சியைப் பிடித்துவிட்டால், எப்படி வேண்டுமானாலும் ஆடலாம்’ என்கிற அவர்களின் அபிலாசை மறைந்துபோயிருக்கிறது. கட்டிங் கேட்பவர்கள் மக்களால் சிறை பிடிக்கப்படுகிறார்கள்.

‘தேனாறும் பாலாறும் ஓடும்’ எனக் கனவு கண்டவர்கள், கண்ணுறங்க கரன்ட் இல்லை! எங்கெங்கும் கொலை, வன்முறைகள், பாலியல் கொடுமைகள்; ஒரு நல்லாட்சிக்குத் தேர்ந்த அனுபவம் தேவை என்பது இலேசாக உறைக்கத் துவங்கியிருக்கிறது.

விஜய் பேசிய வசனங்கள், யதார்த்த சமூகத்தில் பயன்படாதென புரியத் தொடங்கியிருக்கிறது. வாக்குறுதிகள் நிறைவேறாதெனும் உண்மை புலப்பட ஆரம்பித்திருக்கிறது. விஜய் எனும் பிம்பம் மாற்று அல்ல, அது தி.மு.க.வின் திட்டங்களுக்கே பெயர் மாற்றும் காப்பி பேஸ்ட் என்பது உணர்கிறார்கள்.

தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளால் தப்பிப்பிழைத்து ஊசலாடும் ஆட்சி என்பதே இவர்களை உளவியலாகப் பலவீனப்படுத்தத் தொடங்கிவிட்டது!

விஜய் மேடையில் வசனம் பேசியதைப் போன்றே, அடிக்கடி செய்தியாளர்களைச் சந்தித்து, வசன மழையாகப் பொழிவார் என எதிர்பார்த்த இரசிகத் தற்குறிகளுக்குப் பெருத்த ஏமாற்றம்!

சட்டமன்றத்தில் வார்த்தைகளால் விளையாடுவார், தி.மு.க. திக்குமுக்காடும் எனக் கற்பனை செய்தவர்கள், திகைத்துப்போயினர்.

விஜய்யின் இரசனை மட்டுமே மூலதனம் எனும்போது, சட்டமன்றத்தில் கடப்பாரையை விழுங்கியதைப் போல் அமர்ந்திருந்த முகத்தையும், குறிப்பாக, குடுகுடுப்பைக் கோட்டையும் மக்களோ, இரசிகர்களோ இரசிக்கவேயில்லை!

எல்லாமே மனப்பாட வசனங்கள் எனும் இரகசியம், தெரியத் துவங்கிவிட்டது! நாயக பிம்பம் உடைவது அவர்களைச் சோர்வடையச் செய்கிறது! இத்தனையும் நடந்திருப்பது 10 நாட்களில்..,100 நாட்கள் கடந்தால்?” என்ற கேள்வியை முன்வைத்துள்ளார்.

மக்கள் பதில் சொல்லட்டும்!

## ஃப்ளாஷ்பேக்

### கழகத் தொண்டனைப் போற்றும் மாமேதை!



2016-ஆம் ஆண்டு, என் மகனின் திருமண அழைப்பிதழைத் தலைவருக்கு வழங்க, கோபாலபுரம் சென்றேன். தலைவர், “எங்கிருந்து வருகிறீர்கள், என்ன செய்தி?” என்று கேட்டார். “என் மகன் திருமணத்திற்கு அழைப்பிதழ் வழங்கி, வாழ்த்துச் செய்தி பெற வந்திருக்கிறோம்” என்று சொன்னோம். உடனே தலைவர், “வாழ்த்துகள் வாழ்த்துகள்” என்று கூறி அண்ணன் சண்முகநாதனை நோக்கி, “வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்பிவிடு” என்றும், “இந்தத் திருமணத்திற்கு கனிமொழியைச் சென்று வாழ்த்திவிட்டு வரச்சொல்” என்றும் தெரிவித்தார். நான் ஒரு சாதாரண தொண்டன். எங்கள் இல்ல அழைப்பிதழைப் பார்த்து, இவ்வளவு மரியாதை செய்த என் தலைவரை வாழ்வில் என்றைக்கும் மறக்க முடியாது.



சூளைமேடு ராஜேந்திரன்

**- சூளைமேடு ராஜேந்திரன், ஓ.சி.எஃப், ஆவடி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

116

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## சுயமரியாதைக்கான போராட்டம்!

பார்ப்பனர் அல்லாதார் - திராவிடர் - தமிழர் என்ற மூன்றும் ஒரே பொருள் கொண்டவை. காலத்திற்கு ஏற்ப இது மாறி வந்தாலும், மூன்றின் பயன்பாடும் சுயமரியாதையை அடிப்படையாகக் கொண்டதாகவே திகழ்கிறது. ‘வர்ணாஸ்ரம தர்ம மரபை’ எதிர்த்து, முன்வைக்கப்பட்ட சுயமரியாதைக்கான நவீன அடையாளங்கள் இவை.

திராவிட இயக்கத்தின் வெற்றிக்குக் காரணம், அடையாளங்களைக் கட்டமைப்பதில் அது காட்டிய நெகிழ்வுத்தன்மை என்றே சொல்லலாம். இங்கு சாதிகளின் அரசியல் மயமாக்கல்தான் அரசியலை, மக்கள்மயப் படுத்தியுள்ளது. அதைச் சாதிகளின் அடையாளமாகக் கட்டமைக்காமல், சாதி ஒழிப்பை முன்னிறுத்தும் அடையாளங்களாகக் கட்டமைப்பதன் மூலம் பெரும் மக்கள் திரளை ஜனநாயகப்படுத்தியது, திராவிட இயக்கம்.




இந்த இடத்தில்தான் ‘சேரன்மாதேவி குருகுல போராட்டம்’ முக்கியத்துவம் பெறுகிறது. 1923-25-ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் நடைபெற்ற போராட்டம். குருகுலத்தில் பார்ப்பனர் அல்லாதாரும், பார்ப்பனரும் (மாணவர்கள்) ஒன்றாக அமர்ந்து உணவருந்த வேண்டும் என்பது இந்தப் போராட்டத்தின் அடிப்படை. இந்தப் போராட்டத்தின் விளைவாக உருவானது, தந்தை பெரியாரின் ‘சுயமரியாதை இயக்கம்’. பார்ப்பனர் பிடியில் இருந்த காங்கிரஸ் இயக்கத்தையே இரண்டாக உடைத்துப் போட்ட போராட்டம் இது.

‘வைக்கம் போராட்டம்’ நூலை எழுதிய ஆய்வாளர் பழ.அதியமான் அவர்கள் தான் ‘சேரன்மாதேவி குருகுல போராட்டமும் திராவிட இயக்கத்தின் எழுச்சியும்’என்ற நூலையும் எழுதி உள்ளார். காலச்சுவடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

காந்தியின் ‘சத்யாகிரஹ ஆஸ்ரமம்’ போல், தாகூரின் ‘சாந்தி நிக்கேதன்’ போல், இந்திய தேசியக் கல்விமுறையைக் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் சேரன்மாதேவி குருகுலம். தொடங்கியவர், வ.வே.சு.ஐயர். அவரின் சொந்த நிதியில் தொடங்கப்பட்டதல்ல, பல்வேறு இடத்தில் இருந்து நிதி வந்து சேர்ந்தது, தமிழ்நாடு காங்கிரஸ் 10,000 ரூபாய் தருவதாக உறுதி அளித்து, முதல் தவணையாக ரூ.5,000 கொடுத்தது.

அங்கு சாதி வித்தியாசம் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த காங்கிரஸ், பார்ப்பனரல்லாதார் தலைவர்கள் டாக்டர். வரதராஜுலு, தந்தை பெரியார் போன்றோர் இதை எதிர்த்துக் குரல் எழுப்பினார்கள். மேலும், வ.வே.சு. அய்யரிடம் இதைத் தெளிவுபடுத்தும்படி கேட்டிருந்தார்கள். பதில் வராமல் சிக்கல் நீண்டுகொண்டே சென்றது. 1925-ஆம் ஆண்டு நடந்த விபத்தொன்றில் வ.வே.சு.ஐயர் இறந்துபோகிறார். பின் குருகுல போராட்டம் ஒரு முடிவை எட்டுகிறது. அதன் பிறகு, போதிய நிதி இல்லாமல்போனதால் குருகுல செயல்பாடுகள் முடங்கிப்போகின்றன

சமுதாயத் தளத்தில் சுதந்திரத்தையும்-சமத்துவத்தையும், காங்கிரஸ் பார்ப்பனர்கள் விரும்பவில்லை. மரபார்ந்த வர்ணாஸ்ரம அதிகாரங்களையும், நவீன காலனிய அதிகாரங்களையும் கைப்பற்றும் முனைப்புதான் அவர்களிடம் இருந்ததே ஒழிய, ஜனநாயக உணர்வு அவர்களிடம் துளியும் இல்லை என்பதற்கு, சேரன்மாதேவி குருகுல போராட்டம் ஒரு சாட்சி.

இப்போராட்டத்தின் விளைவாகத் தோன்றிய ‘சுயமரியாதை இயக்கம்’ வெகுஜன மக்களின் சுயமரியாதையை மீட்டெடுத்தது; அனைவரையும் சமமாக நடத்தியது; அதிகாரக் குவிப்பை எதிர்த்துக் கேள்வி கேட்டது; அனைத்து விதமான அடையாளங்களையும் உள்ளடக்கிய இயக்கமாகத் திராவிட இயக்கம் செயல்பட்டது. இன்றைக்கும் அதே பொருத்தப்பாட்டுடன் நிலைபெற்றுள்ளது.

**...வாசிப்போம்.**

## ம்லருகு

### முதல் சுயமரியாதைத் திருமணம்!

1928-ஆம் ஆண்டு மார்ச் 28-ஆம் தேதி, அருப்புக்கோட்டையை அடுத்த சுக்கிலநத்தம் கிராமத்தில், பார்ப்பனப் புரோகிதர் இல்லாத முதல் திருமணத்தை, தந்தை பெரியார் நடத்திவைத்தார். இத்திருமணத்தில் கி.ஆ.பெ.விசுவநாதம், ஜே.எஸ்.கண்ணப்பர், பட்டுக்கோட்டை அழகிரி, எஸ்.வி.லிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். புரோகிதர் இல்லாமல், சடங்குகள் இல்லாமல் நடந்த இத்திருமணம்தான் முதல் சுயமரியாதைத் திருமணமாக வரலாற்றுப் பதிவுகள் சொல்கின்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900